கோர்ட்டும் அந்த விதிமுறைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுகிறவர்கள் பெண்களாக இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. அந்தப் பதவிக்குத் தகுதியான போதுமான பெண்கள் இல்லை. அதுபற்றி இப்போது பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு அறிவிக்கப்பட்டு, சீனியாரிடி பிரகாரம் தேர்ந்தெடுக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆயினும் இதுவரை அந்தப் பதவிகள் காலியாக வைக்கப்பட வில்லை. சீனியர் விமன் ஹெட் நர்சுகளை அந்தப் பதவிகளில் போட்டு வேலை நடந்து வருகிறது. ட்யூடி நர்சுகள் சீனியர் விமன் ஹெட் நர்ஸ் பணியை ஆற்றி வருகிருர்கள்.

Women students for B.E. Course.

*213 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether some girl students have been selected for the B.E. Course in 1969; and

(b) if so, the number selected?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 16.

திரு. கே. விஞயகம்: இப்படி ஆண்களே பயின்று வந்த துறையில் பெண்களும் பயில்கிருர்களே, அவர்களது உடல் கூறு இதற்கு சரிவர அமைகிறதா?

Is their sex against them in the matter of becoming proper engineers?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சரிவர அமைந்து இருக்கிற காரணத்திஞல்தான் 16 பேர்கள் சேர்ந்திருக்கிருர்கள். அவர்களுக்குத் தகுதியிருக்கிறது என்ற காரணத்திஞல்தான் தேர்வுக் குழுவினரும் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள். ரேடியோ என்ஜினியரிங், சிவில் என்ஜினியரிங் ஆகிய துறைகளில் அவர்கள் நன்ருகப் பணி யாற்றுகிருர்கள். மெக்கானிக்கல் என்ஜினியரிங் பகுதிகளில்கூட மேல் நாடுகளில் பணியாற்றுகிருர்கள். 1965-66-இல் 4 பேர்கள் இருந் தார்கள். அதற்கு அடுத்த ஆண்டு 3 பேர்கள், அதற்கடுத்த ஆண்டு 9 பேர்கள், அதற்கடுத்த ஆண்டு 5 பேர்கள் என்ருல் இந்த ஆண்டு 16 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 13 பேர்கள் சேர்ந்து பயின்று வருகிருர்கள்.

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோர்

*214. விஞ—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் உள்ள பர்மா தமிழர்களுக்கு தமிழக அரசு கடன் தொகை அளிக்க உத்தேசித்துள்ளதா?

(இ) எவ்வளவு ரூபாய் அளிக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) & (இ) : 1970–71 வருஷத்திற்கு வியாபாரக் கடனுக்காக ரூ. 4,00,000-மும், வீடு கட்டுவதற்குரிய கடனுக்காக ரூ. 2,50,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. வை. சுவாமிநாதன் : இப்போது அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற கடன் உதவிகளைத் தவிர பாய்லர் தொழிற்சாலை போன்றவற்றில் வேலை வாய்ப்புகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தொழில் நடத்த கடனும் கொடுக்கப்படுகிறது. வேலை வாய்ப்புகளும் அளிக்கப்படுகிறது.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பர்மாவில் இருந்து வந்திருக்கிற அகதிகளுக்கு கடன் தொகை 5 ஆயிரம் வரை கொடுக்கலாம் என்று முன்னர் ஒரு முறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிக் கொடுப்பதில் காலதாமதம் ஆகிறதே. காலதாமதம் ஆகாமல் அந்தக் கடன் தொகையைக் கொடுக்க உதவி செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முதலில் இரண்டாயிரம் வரை கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது ஐந்தாயிரம் வரை கொடுக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. விரைவாகக் கொடுப்பதாகத்தான் எனக்கு இருக்கிற தகவல். கூட்டுறவுத் துறையிலும் வேகமாக, விரைவாக வழங்கப்படுகிறது.

திரு. எம். எஸ். மணி : திருச்சியில் உள்ள பர்மா தமிழர்கள், கடன் கொடுப்பதோடு கூட கடைகள் கட்டித்தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்களே, இதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதுபற்றி அவர்களுக்கே தெரியும். ஸ்ரீரங்கத்தில் கடைகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. யாரும் அங்கே போகவில்லை என்பது அவர்களுக்கே தெரியும்.

திரு. டி. மார்டின் : பொதுவாக அகதிகளுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள், உதவிகள் பற்றி அந்த அகதிகளுடைய கவனத்திற்கு வரும்படியாக நல்ல முறையில் எந்த எந்த அதிகாரிகளிடத்தில் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும், எது எதற்குக் கடன் கொடுக்கப்படும் என்பதுபற்றி விளம்பரப்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உறுப்பினர் தவறாகக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அகதிகளைப் பொறுத்தவரை அவர்கள் சர்வதேச விவகாரங்களை எல்லாம் நன்கு தெரிந்தவர்கள். நேரில் அமைச்சரையே அணுகி காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளக்கூடியவர்கள். திருச்சியைப் பொறுத்தவரை 1969-ஆம் ஆண்டு முடிகிற வரையில் 69 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரம் இருக்கிறது.